
தனிப்பிரதி ரூ.5/
ஆண்டு சந்தா ரூ.50/

THE WORD OF CHRIST

# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்



கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே
சகல ஞானத்தோடும் பரிபூரணமாக
வாசமாயிருப்பதாக

கொலோசெயர் 3:16

ஆசிரியர்
B. அர்ஜூனன்

மரம் 10 மார்ச் 2010 கனி 4

## கிறிஸ்தவர்கள் தினமும் செய்யவேண்டிய பத்துகடமை

## 10 Daily Duties of Christians

ஜெபியுங்கள் - மத்.6:11; லூக்.11:3
அநுதினமும் சிலுவையை எடுத்துக்கொள்ளுங்கள் - லூக்.9:23
ஒருமைபாட்டில் நிலைத்திருங்கள் - அப்.2:46
போதியுங்கள் - மத்.26:55; லூக்.19:47
ஆத்தும ஆதாயம் செய்யுங்கள் - அப்.2:47;16:5
இயேசுவை குறித்து பிரசங்கியுங்கள் - அப்.5:42
வேதத்தை ஆராய்ந்து பாருங்கள் - அப்.17:11
வேதவசனத்தைக் குறித்து சம்பாஷியுங்கள் - அப்.19:9
சபையைக் குறித்த பொறுப்புடையவர்களாயிருங்கள் - 2கொ.11:28
ஒருவருக்கொருவர் புத்தி சொல்லுங்கள் - எபி.3:13




### FORM IV

| | |
|---|---|
| 1. Place of Publication | : Batlagundu. |
| 2. Periodicity of its Publication | : Monthly. |
| 3. Printer`s Name | : R.Sathiyamoorthi. |
| 4. Address | : 14/13/24 Melamanthai St.,<br>Batlagundu-624 202,<br>Dindigul Dt, Tamil Nadu. |
| 5. Whether citizen of India | : Yes. |
| 6. Publisher`s Name | : B.Arjunan. |
| 7. Address | : 17/2/102 D/5 Rajan Nagar<br>Batlagundu-624 202,<br>Dindigul Dt, Tamil Nadu. |
| 8. Editor`s Name | : B.Arjunan. |
| 9. Address | : 17/2/102 D/5 Rajan Nagar<br>Batlagundu-624 202,<br>Dindigul Dt, Tamil Nadu. |

I, B.Arjunan, hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.

sd

Date:28.02.2010 Signature of Publisher.


"Go ye into all the world, and preach the gospel to every creature"
Mark 16:15

"The Churches Of Christ Salute you" Romans 16:16


Published by
WORLD LITERATURE PUBLICATIONS
Post Box No.5, Batlagundu - 624 202.
SOUTH INDIA

# தி வேர்ட் ஆப் கிறைஸ்ட்

*THE WORD OF CHRIST*

புதிய ஏற்பாட்டு தூய கிறிஸ்தவ மாத இதழ்

மரம் - 10 மார்ச் - 2010 கனி - 4


ஆசிரியருரை

## பொறுமையோடே ஓடக்கடவோம்

## Let us Run With Endurance the Race



இச்செய்தியை வாசிக்கிற உங்கள் யாவருக்கும் விசுவாசத்தைத் துவக்குகிறவரும் முடிக்கிறவருமாயிருக்கிற இயேசுவின் தூயநாமத்தில் வாழ்த்துதலைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

பொறுமை ஒவ்வொருவருக்கும் மிக அவசியம். ஏனெனில் பொறுமையில்லாமல் அநேக நலமான காரியங்களை இழந்து விடுகிறார்கள். ஒரு கிறிஸ்தவனை வேதாகமம் பொறுமைக்கு நேரே வழிநடத்துகிறது. "மேகம்போன்ற இத்தனை திரளான சாட்சிகள் நம்மைச் சூழ்ந்து கொண்டிருக்க, பாரமான யாவற்றையும், நம்மைச் சுற்றி நெருங்கி நிற்கிற பாவத்தையும் தள்ளிவிட்டு, விசுவாசத்தைத் துவக்குகிறவரும் முடிக்கிறவருமாயிருக்கிற இயேசுவை நோக்கி, நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடே ஓடக்கடவோம்" என எபிரெய கிறிஸ்தவர்களுக்கு அப்போஸ்தலனாகிய பவுல் எழுதுகிறார் (எபி.12:1). மேகம்போன்ற திரளான சாட்சிகள் நமக்கு உண்டு என்பதை நினைப்பூட்டுகிறார். நம்முடைய முற்பிதாக்கள், விசுவாசத்தினாலே ராஜ்யங்களை ஜெயித்தார்கள். நீதியை நடப்பித்தார்கள், வாக்குத்தத்தங்களைப் பெற்றார்கள், சிங்கங்களின் வாய்களை அடைத்தார்கள், அக்கினியின் உக்கிரத்தை அவித்தார்கள், பட்டயக்கருக்குக்குத் தப்பினார்கள், பலவீனத்தில் பலன் கொண்டார்கள்; யுத்தத்தில் வல்லவர்களானார்கள், அந்நியருடைய சேனைகளை முறியடித்தார்கள். இவையெல்லாம் விசுவாசத்தினாலே செய்து, விசுவாசத்தினாலே வெற்றிகொண்டார்கள். ஒரு கிறிஸ்தவன் பொறுமையோடிருக்க அவனுக்கு விசுவாசம் மிக அவசியம். உங்களுக்கு அப்படிப்பட்ட விசுவாசம் இருக்கிறதா?

ஒவ்வொருநாளும் உங்களை நெருக்குகின்ற பாரமான யாவற்றையும், உங்களைச் சுற்றி நெருங்கிநிற்கிற பாவத்தையும் தள்ளிவிடவேண்டும். இதைச்செய்யாது நம்முடைய வாழ்க்கையில் பொறுமை உண்டாகாது. அநேகர் போன்மூலமாகவும் கடிதங்கள் மூலமாகவும் ஆசீர்வாதங்களுக்காக ஜெபிக்கக் கேட்டுக்கொள்கிறார்கள். நாம் தேவனுடைய ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ள வேண்டுமானால் முதலாவது மேற்கண்ட காரியங்களை நாம் தள்ளிவிடவேண்டும். பாவத்தை தண்ணீரைப்போல ஒருவர் பருகிக்கொண்டு எனக்காக ஜெபியுங்கள் என்று கேட்டுக்கொண்டால் அந்த ஜெபத்திற்கு தேவன் பதில் கொடுப்பாரா? கர்த்தருடைய வசனம் நம்மை சரிசெய்யும்படியாக எவைகளை களையவேண்டுமென்று சொல்லுகிறதோ அவைகளை உடனே களைந்துபோடவேண்டும். அப்பொழுதே நம்முடைய வேண்டுதலுக்கு கர்த்தர் செவிகொடுப்பார். "நீதி ஜனத்தை உயர்த்தும்; பாவமோ எந்த ஜனத்துக்கும் இகழ்ச்சி" என்று நீதி.14:34-ல் படிக்கிறோம்.

**நமக்கு நியமிக்கப்பட்டிருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடு ஓட சோர்ந்துபோகாதிருக்கவேண்டும்.** "நீங்கள் இளைப்புள்ளவர்களாய் உங்கள் ஆத்துமாக்களில் சோர்ந்துபோகாதபடிக்கு, தமக்கு விரோதமாய்ப் பாவிகளால் செய்யப்பட்ட இவ்விதமான விபரீதங்களைச் சகித்த அவரையே நினைத்துக்கொள்ளுங்கள்" (எபி.12:3). நாம் ஒவ்வொருநாளும் ஆண்டவருடைய பாடுகளை எண்ணிப்பார்க்கவேண்டும். அப்பொழுது பொறுமையோடே ஓட அது நமக்கு உதவியாயிருக்கும். அவரை உமிழ்ந்து துப்பினார்கள், கன்னத்தில் அறைந்தார்கள், குட்டினார்கள், முள்முடி சூட்டி இகழ்ந்தார்கள், உன்னை நீயே இரட்சித்துக்கொள், சிலுவையில் இருந்து இறங்கிவா என்றெல்லாம் அவரை ஏளனம் செய்தார்கள். இவைகளையெல்லாம் உன்னதத்தின் குமாரன் பொறுமையோடு சகித்தார். அவர் ஒருவேளை உங்களைப்போலவும் என்னைப் போலவும் கோபப்பட்டிருப்பாரேயானால் என்ன நடந்திருக்கும், உங்களுக்கும் எனக்கும் ஆன்மீக இரட்சிப்பு இல்லாமற்போயிருக்கும். அவர் தேவனுடைய சித்தத்தை நிறைவேற்ற சிலுவைபாடுகளை ஏற்றார். பிதாவாகிய தேவன் அவரை மூன்றாம் நாள் உயிரோடு எழுப்பினார். நீ சோர்ந்துபோகாமல் பொறுமையோடு இருப்பாயானால் அவர் உனக்கும் பெலன் கொடுப்பார். "சோர்ந்துபோகிறவனுக்கு அவர் பெலன் கொடுத்து, சத்துவமில்லாதவனுக்குச் சத்துவத்தைப் பெருகப்பண்ணுகிறார். இளைஞர் இளைப்படைந்து சோர்ந்துபோவார்கள், வாலிபரும் இடறிவிழுவார்கள். கர்த்தருக்குக் காத்திருக்கிறவர்களோ புதுப்பெலன் அடைந்து, கழுகுகளைப்போலச் செட்டைகளை அடித்து எழும்புவார்கள்; அவர்கள் ஓடினாலும் இளைப்படையார்கள், நடந்தாலும் சோர்ந்துபோகார்கள்" (ஏசா.40:29-31). கர்த்தரை நம்பி பொறுமையோடிருக்கிறவர்கள் மட்டுமே கழுகுகளைப்போல செட்டைகளை அடித்து எழும்புவார்கள். நீங்கள் கர்த்தருக்கு பொறுமையோடு காத்திருக்கிறீர்களா? அப்படி காத்திருக்கிற நீங்கள் அவரையே நோக்கிப்பாருங்கள்.

அநேகர் நான் ஒரு கிறிஸ்தவன் என்று சொல்லுவார்கள். ஆனால் கிறிஸ்துவுக்கும் அவர்களுக்கும் சம்பந்தமில்லாமல் வாழ்ந்துகொண்டிருப்பார்கள். அப்படியில்லாமல் நீங்கள் அவரையே நினைத்துக்கொள்ளவேண்டும். அவர் நமக்கு மாதிரியை விட்டு சென்று இருக்கிறார். அதைக்குறித்து பேதுரு எழுதுகிறார்; "இதற்காக நீங்கள் அழைக்கப்பட்டுமிருக்கிறீர்கள்; ஏனெனில், கிறிஸ்துவும் உங்களுக்காகப் பாடுபட்டு, நீங்கள் தம்முடைய அடிச்சுவடுகளைத் தொடர்ந்துவரும்படி உங்களுக்கு மாதிரியைப் பின்வைத்துப்போனார்" என்று எழுதுகிறார் (1பேது.2:21). ஒரு கிறிஸ்தவன் கிறிஸ்துவினுடைய அடிச்சுவடுகளைத் தொடரவேண்டும். இன்றைக்கு கிறிஸ்தவம் கிறிஸ்துவை விட்டுவிட்டு உலகத்தை உள்ளே வைத்திருக்கிறது. உலகத்திற்கு ஒத்தாற்போல வேஷம்போடுகிறார்கள். இப்படிப்பட்டவர்களை கர்த்தர் அறியேன் என்பார். இச்செய்தியை வாசிக்கிற அன்பு வாசகரே நீ உன் வாழ்க்கையில் பொறுமையோடு ஓடிக்கொண்டிருக்கிறாயா? உன் ஓட்டத்தை பொறுமையோடு ஓடி முடிப்பேன் என்ற நம்பிக்கையோடிருக்கிறாயா? "கர்த்தர் எவனிடத்தில் அன்புகூருகிறாரோ அவனை அவர் சிட்சித்து, தாம் சேர்த்துக்கொள்ளுகிற எந்த மகனையும் தண்டிக்கிறார் என்று பிள்ளைகளுக்குச் சொல்லுகிறதுபோல உங்களுக்குச் சொல்லியிருக்கிற புத்திமதியை மறந்தீர்கள்" என்று எபிரெய கிறிஸ்தவர்களுக்கு பவுல் நினைப்பூட்டுகிறார் (எபி.12:6). ஆகையால் கர்த்தருடைய சிட்சையை அற்பமாய் எண்ணாதிருங்கள். உங்களிடத்தில் அன்பு செலுத்துகிறபடியால் அவர் உங்களை சிட்சிக்கிறார். நீங்கள் சிட்சையைச் சகிக்கிறவர்களாயிருந்தால் தேவன் உங்களைப் புத்திரராக எண்ணி நடத்துகிறார் என்று அறிந்துகொள்ளுங்கள். தகப்பன் தன் மகனை நன்மைக்கு ஏதுவாக சிட்சிப்பதுபோல தேவன் நம்மை சிட்சிக்கிறார். தகப்பன் சிட்சியாத புத்திரனுண்டோ? என வேதம் கேள்வி எழுப்புகிறது. "நான் நேசிக்கிறவர்களெவர்களோ அவர்களைக் கடிந்துகொண்டு சிட்சிக்கிறேன்; ஆகையால் நீ ஜாக்கிரதையாயிருந்து, மனந்திரும்பு என்று லவோதிக்கேயா சபைக்கு எழுதுகிறதை வெளி.3:19-ல் வாசிக்கிறோம். இன்றைக்கு கடிந்துகொள்ளுதலை அநேகர் அலட்சியப்படுத்துகிறதை பார்க்கிறோம். "கண்டனையை வெறுக்கிறவனோ மோசம்போகிறான்" என நீதி.10:17-ல் படிக்கிறோம். நம்முடைய நன்மைக்கு ஏதுவாகவே நாம் கடிந்துகொள்ளப் படுகிறோம். ஆகையால் கடிந்துகொண்டு சிட்சிக்கிறேன் என்று கர்த்தர் வெளிப்படுத்தலில் திருவுளம்பற்றுகிறார். பவுலும் தீமோத்தேயுவுக்குச் சொன்ன ஆலோசனை அதுதான். "சமயம் வாய்த்தாலும் வாய்க்காவிட்டாலும் ஜாக்கிரதையாய்த் திருவசனத்தைப் பிரசங்கம்பண்ணு; எல்லா நீடிய சாந்தத்தோடும் உபதேசத்தோடும் கண்டனம்பண்ணி, கடிந்துகொண்டு புத்திசொல்லு" என்கிறார் (2தீமோ.4:2).

பொதுவாக பெற்றோர்கள் தங்களுக்கு எப்படித் தோன்றுகிறதோ அதற்கு ஏற்றார்போல சிட்சிப்பார்கள். "அவர்கள் தங்களுக்கு நலமென்று தோன்றினபடி

கொஞ்சகாலம் சிட்சித்தார்கள்; இவரோ தம்முடைய பரிசுத்தத்துக்கு நாம் பங்குள்ளவர்களாகும் பொருட்டு நம்முடைய பிரயோஜனத்துக்காகவே நம்மை சிட்சிக்கிறார்'' என குறிப்பிடுகிறார் (எபி.12:10). நாம் பரிசுத்தத்தில் பங்குபெறவேண்டும். ஆகையால் நம்மை முற்றிலும் பரிசுத்தமாக்கும்படியாக கறைதிறை முதலானவைகள் ஒன்றும் இல்லாமல் பரிசுத்தமும் பிழையற்றதுமான மகிமையுள்ள ஜனங்களாக இருக்கும்படியாக நம்முடைய பிரயோஜனத்துக்காவே நம்மை சிட்சிக்கிறார் என்கிறார். ஐயோ, தேவன் என்னை சோதிக்கிறாரே என்று அநேகர் சொல்லக் கேள்விப்பட்டிருப்பீர்கள். "தேவன் பொல்லாங்கினால் சோதிக்கப்படுகிறவரல்ல, ஒருவனையும் அவர் சோதிக்கிறவருமல்ல. அவனவன் தன்தன் சுய இச்சையினாலே இழுக்கப்பட்டு, சிக்குண்டு, சோதிக்கப்படுகிறான்'' என யாக்கோபு சொல்லுகிறார் (யாக்.1:13,14). சோதனை வேறு சிட்சை வேறு இதை நாம் முதலாவது புரிந்துகொள்ளவேண்டும். சோதிக்கிறவன் பிசாசு. அவனுக்கு மற்றொரு பெயர் சோதனைக்காரன். தேவன் நல்லவர், அன்புள்ளவர். அவர் ஒருவனையும் சோதிக்கிறவரல்ல. ஏனென்றால் மனுஷனை அவரே உண்டாக்கினவர். ஆகையால் அவனை அவர் சோதிக்கவேண்டிய அவசியமில்லை. நம்முடைய நன்மைக்காக அவர் நம்மை சிட்சிக்கிறார் என்பதை அறிந்து மனந்திரும்பும்படி அவர் எதிர்பார்க்கிறார். "இந்தச் சிறியரில் ஒருவனாகிலும் கெட்டுப்போவது பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவின் சித்தமல்ல'' என்று ஆண்டவர் இயேசு சொன்னவார்த்தையையும் நினைவுகூருங்கள் (மத்.18:14).

**நம்முடைய ஓட்டத்தில் பொறுமையோடு ஓடும்போது மிகுந்த ஆசீர்வாதத்தை அது கொண்டுவரும்.** "எந்தச் சிட்சையும் தற்காலத்தில் சந்தோஷமாய்க் காணாமல் துக்கமாய்க் காணும்; ஆகிலும் பிற்காலத்தில் அதில் பழகினவர்களுக்கு அது நீதியாகிய சமாதான பலனைத் தரும்'' (எபி.12:11). பெதஸ்தா குளத்தில் முப்பத்தெட்டு வருடங்களாக காத்திருந்த வியாதியஸ்தனின் நம்பிக்கை வீண்போகவில்லை. கர்த்தர் அவனை சந்தித்து அவன் படுக்கையை எடுத்துக்கொண்டு நடக்கும்படியாக கட்டளை கொடுத்தார். அவன் நடந்துசென்றான். பலவருடங்களாக காத்திருந்து என்ன பலன் என்று உங்கள் விசுவாசத்தை தளரவிட்டுவிடாதிருங்கள். பொறுமையோடிருந்து பழக பழக அது நமக்கு நீதியாகிய சமாதான பலனைத்தரும் என்ற நம்பிக்கையோடிருங்கள். பவுல் ரோமகிறிஸ்தவர்களுக்கு எழுதும்போது; "நமக்குத் தெரிந்திருக்கிறபடி, இதுவரைக்கும் சர்வ சிருஷ்டியும் ஏகமாய்த் தவித்துப் பிரசவவேதனைப் படுகிறது. அதுவுமல்லாமல், ஆவியின் முதற்பலன்களைப் பெற்ற நாமுங்கூட நம்முடைய சரீர மீட்பாகிய புத்திரசுவிகாரம் வருகிறதற்குக் காத்திருந்து, நமக்குள்ளே தவிக்கிறோம்'' என எழுதுகிறார் (ரோ.8:22,23). ஒரு ஸ்திரீயானவள் ஒரு குழந்தையை பெற்றெடுக்க எவ்விதமான வேதனையை அநுபவிப்பாளோ அதைப்போல சர்வ சிருஷ்டியும் ஏகமாய்த் தவித்துப் பிரசவவேதனைப் படுகிறது என்கிறார்.

அவரோடேகூடப் பாடுகளைச் சகித்தோமானால் அவரோடேகூட ஆளுகையும் செய்வோம் என்ற நம்பிக்கையோடு இருந்து விசுவாசத்தை துவக்குகிறவரும் முடிக்கிறவருமாகிய இயேசுவை நோக்கி நமக்கு நியமிக்கப்பட்டிருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடு ஓடக்கடவோம்.

**நம்முடைய வாழ்க்கைக்கு பொறுமை மட்டும் போதுமா?**

கிறிஸ்தவ வாழ்க்கையில் நமக்கு தேவையானவைகளில் பொறுமையும் ஒன்று. இதைப்போல இன்னும் சிலவற்றையும் நம்முடைய வாழ்கையில் கூட்டிக்கொள்ளவேண்டும். பேதுரு சொல்கிறார்; “நீங்கள் அதிக ஜாக்கிரதையுள்ளவர்களாய் உங்கள் விசுவாசத்தோடே தைரியத்தையும், தைரியத்தோடே ஞானத்தையும், ஞானத்தோடே இச்சையடக்கத்தையும், இச்சையடக்கத்தோடே பொறுமையையும், பொறுமையோடே தேவபக்தியையும், தேவபக்தியோடே சகோதரசிநேகத்தையும், சகோதரசிநேகத்தோடே அன்பையும் கூட்டி வழங்குங்கள்” என்கிறார் (2பேது.1:5-7). இவைகள் உங்களுக்கு உண்டாயிருந்து பெருகினால், உங்களை நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை அறிகிற அறிவிலே வீணரும் கனியற்றவர்களுமா யிருக்கவொட்டாது. வளர்ந்து தேவஆசீர்பெறுங்கள்.

## தேனிலும் இனிமை தேவனின் கிருபை

1. தேவன் உனக்கு **கிருபை** செய்யக்கடவர் – ஆதி.43:29
2. நீர் **கிருபையும்** இரக்கமுமுள்ள தேவன் – நெகே. 9:31
3. உம்முடைய **கிருபையினிமித்தம்** என்னை இரட்சியும் – சங்.6:4
4. கர்த்தரை நம்பியிருக்கிறவனையோ **கிருபை** சூழ்ந்து கொள்ளும் – சங் 32:10
5. உமது **கிருபையும்,** உமது உண்மையும் எப்பொழுதும் என்னைக் காக்கக்கடவது – சங்.40:11
6. காலையிலே உம்முடைய **கிருபையை** மகிழ்ச்சியோடு புகழ்வேன் – சங்.59:16
7. ஜீவனைப் பார்க்கிலும் உமது **கிருபை** நல்லது – சங்.63:3
8. தேவாதி தேவனைத் துதியுங்கள் அவர் **கிருபை** என்றுமுள்ளது– சங் 136:2
9. தமக்குப்பயந்து, தமது **கிருபைக்குக்** காத்திருக்கிறவர்கள் மேல் கர்த்தர் பிரியமாயிருக்கிறார் – சங்.147:11
10. தாழ்மையுள்ளவர்களுக்கோ **கிருபையளிக்கிறார்** – நீதி.3:34
11. என் **கிருபை** உன்னைவிட்டு விலகாமலும் இருக்கும் – ஏசாயா. 54:10
12. நாம் நிர்மூலமாகாதிருக்கிறது கர்த்தருடைய **கிருபையே** – புலம்பல் 3:22
13. தேவனே! பாவியாகிய என் மேல் **கிருபையாயிரும்** – லூக்கா 18:13
14. **கிருபையும்** சத்தியமும் இயேசு கிறிஸ்துவின் மூலமாய் உண்டாயின – யோவான் 1:17
15. என் **கிருபை** உனக்குப் போதும், பலவீனத்திலே என் பலம் பூரணமாக விளங்கும் – 2கொரி.12:9

ஆ.இராஜாமணி

# இன்று ஏன் ஒரே ஞானஸ்நானம் உண்டு?

## WHY THERE IS BUT ONE BAPTISM TODAY?

*J.C.Choate*



One Lord, one faith, one baptism

இதைக்குறித்து நீங்கள் எச்சரிக்கை யுடையவர்களாக இருக்கிறீகளோ அல்லது இல்லையோ நான் அறியேன், ஆனால் கிறிஸ்துவில் விசுவாசம் கொண்டிருக்கிறவர்கள் மத்தியில் அநேக ஞானஸ்நானங்கள் உண்டென போதிக்கிறவர்கள் இருக்கின்றனர். அவைகளில் தண்ணீரில் மூழ்குவதால் ஞானஸ்நானம், ஒருவனுடைய தலையில் தண்ணீரை தெளிப்பதால் ஞானஸ்நானம், ஒருவனுடைய தலையில் தண்ணீரை ஊற்றி ஞானஸ்நானம், பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம் இன்னும் இதுபோன்ற பல முறைகளில் ஞானஸ்நானம் உண்டெனக் கூறப்படுகிறது. இந்தக் காரியத்தைக் குறித்து போதிக்கிறவர்களுடைய கருத்துப்படி ஞானஸ்நானத்திற்கு பல வேறுபட்ட நோக்கங்கள் உள்ளன. பலர், ஞானஸ்நானமானது ஒருவனுடைய இரட்சிப்பிற்கான அடையாளமென கூறுகின்றனர் மற்றவர்கள் ஞானஸ்நானமானது பாவங்களின் மன்னிப்புக்கென்றும், ஒருவனை கிறிஸ்துவுக்குட்படுத்துவதற் கென்றும், அவருடைய சபைக்குள் சேர்ப்பதற்கென்றும் என போதிக்கின்றனர்.

வேதாகமம், ஒரே ஒரு ஞானஸ்நானம் மட்டுமே உண்டென்று போதிக்கிறது. பவுல் "உங்களுக்கு உண்டான அழைப்பினாலே நீங்கள் ஒரே நம்பிக்கைக்கு அழைக்கப்பட்டது போல, ஒரே சரீரமும், ஒரே ஆவியும் உண்டு; ஒரே கர்த்தரும், ஒரே விசுவாசமும் ஒரே ஞானஸ்நானமும், எல்லாருக்கும் ஒரே தேவனும், பிதாவும் உண்டு; அவர் எல்லார் மேலும், எல்லாரோடும் உங்கள் எல்லாருக்குள்ளும் இருக்கிறவர்" (எபே. 4:4-6) என்கிறார். ஒரே தேவனும், ஒரே கர்த்தரும் அல்லது கிறிஸ்துவும், ஒரே ஆவியும் அல்லது பரிசுத்த ஆவியும், ஒரே விசுவாசமும், ஒரே ஞானஸ்நானமும், ஒரே சரீரமும், ஒரே நம்பிக்கையும் உண்டென தேவ ஆவியினால் ஏவப்பட்ட தேவமனிதன் சொன்னதை தயவு செய்து கவனியுங்கள் இவையெல்லாவற்றிற்கும் மேலாக, அவன் ஒரே ஞானஸ்நானம் உண்டென வலியுறுத்திக் கூறுகிறான். ஒரே தேவனும், ஒரே கிறிஸ்துவும், இன்னும் இதுபோல் மற்றவைகளும் ஒரே காரியமாக இருக்கிறதாக பொருள்படுமானால் பிறகு ஒரே ஞானஸ்நானம் என்பதும் ஒரே ஞானஸ்நானம் தானே.

ஆனால் இது எந்த ஞானஸ்நானமாக இருக்கும்? இன்று மனுஷர் பேசுகின்ற ஞானஸ்நானத்தை தவிர, வேறுவாக்கியங்களிலும் கூட பல்வேறு ஞானஸ்நானங்களைப் பற்றி நாம் வாசிக்கிறோம், உதாரணமாக, லூக்கா

7:29-ல் ஜனங்கள் யோவான் கொடுத்த ஞானஸ்நானத்தைப் பெற்றுக்கொண்டதாக வாசிக்கிறோம். கிறிஸ்து தம்மை சோதிக்கும்படி வந்த ஒரு பிரிவினரை நோக்கி "யோவான் கொடுத்த ஸ்நானம் தேவனால் உண்டாயிற்றோ, மனுஷரால் உண்டாயிற்றோ, எனக்கு உத்தரவு சொல்லுங்கள் என்றார்" (மாற்கு 11:30). கிறிஸ்து யோவானால் ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டார் (மத். 3:13-17). கிறிஸ்து எல்லா நீதியையும் நிறைவேற்றும்படிக்கு ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டபோதிலும், பொதுவாக ஜனங்கள் சபையாகிய கர்த்தருடைய ராஜ்யத்தின் வருகைக்கு ஆயத்தப்படும்படிக்கு ஞானஸ்நானம் பெற்றார்கள். ஆனபடியினால் இது மனந்திரும்புதலுக்கான ஞானஸ்நானம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது (லூக் 3:6). பவுல் எபேசுவில் யோவானுடைய ஞானஸ்நானத்தின்படி ஞானஸ்நானம் பெற்றிருந்த சில மனுஷரை எபேசுவில் கண்டான். ஆனால் அவர்கள் ஆவி அல்லது பரிசுத்த ஆவியைப்பற்றி கேள்விப்படாதவர்களாயிருந்தனர். ஆனபடியினால் அவன் அதன்பிறகு யோவானுடைய ஞானஸ்நானத்தின் நோக்கத்தைக் குறித்த காரியங்களை அவர்களுக்குப் போதித்தான். "யோவான் தனக்குப்பின் வருகிறவராகிய கிறிஸ்து இயேசுவில் விசுவாசிகளாயிருக்கவேண்டும் என்று ஜனங்களுக்குச் சொல்லி மனந்திரும்புதலுக்கு ஏற்ற ஞானஸ்நானத்தைக் கொடுத்தானே என்றான். அதைக்கேட்ட போது அவர்கள் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றார்கள்" (அப்.19:1-5). யோவானுடைய ஞானஸ்நானமானது சந்தேகத்திற்கு இடமளிக்கவில்லை. இது ஒரு நோக்கத்தை நடப்பித்தது அதன்பின் அது இல்லாமல் முடிவடைந்தது.

மத்தேயு 3:11, 12-ல் யோவான் ஸ்நானகன், அல்லது ஞானஸ்நானங்கொடுத்த யோவான் அல்லது தண்ணீரில் மூழ்கச்செய்தவன் கிறிஸ்து கொடுப்பாரென இரு வகையான ஞானஸ்நானங்களைப் பற்றி பேசினான். நாம் வாசிக்கிறோம். "மனந்திரும்புதலுக்கென்று நான் ஜலத்தினால் உங்களுக்கு ஞானஸ்நானங் கொடுக்கிறேன், எனக்குப்பின் வருகிறவரோ என்னிலும் வல்லவராயிருக்கிறார். அவருடைய பாதரட்சைகளைச் சுமக்கிறதற்கு நான் பாத்திரன் அல்ல; அவர் பரிசுத்த ஆவியினாலும் அக்கினியினாலும் உங்களுக்கு ஞானஸ்நானம் கொடுப்பார். தூற்றுக்கூடை அவர்கையில் இருக்கிறது. அவர் தமது களத்தை நன்றாய் விளக்கி, தமது கோதுமையைக் களஞ்சியத்தில் சேர்ப்பார்; பதரையோ அவியாத அக்கினியினால் சுட்டெரிப்பார் என்றான்." இங்கே யோவான், கிறிஸ்து எவ்வாறு ஜனங்களை நடத்துவார் என்பதை அறுவடை செய்கிற ஒருவராக படம்பிடித்து சுட்டிக்காட்டி விளக்குகிறான். அந்நாட்களின் ஜனங்கள் கோதுமை அறுவடையைக் குறித்து நன்கு அறிந்தவர்களாயிருந்தனர். அந்த கோதுமை கதிரடிக்கப்படும், பின்பு காற்றின் உதவியினாலோ அல்லது தூற்றுக்கூடையினாலோ பதரெல்லாம் தூற்றப்பட்டு கோதுமை மணிகள் பிரித்தெடுக்கப்படும். அந்த கோதுமை சேகரிக்கப்பட்டு உணவுக்காக பத்திரப்படுத்தப்படும் ஆனால் பதர் அல்லது

உபயோகமற்ற பொருள் சுட்டெரிக்கப்படும். இந்த முறையிலே கிறிஸ்து பரிசுத்த ஆவியினாலும் அக்கினியினாலும் ஞானஸ்நானம் கொடுப்பாரென யோவான் கூறினான், அதன்பிறகு, இயேசு தேற்றரவாளர் அல்லது பரிசுத்த ஆவியை அப்போஸ்தருக்கு அனுப்புவேன் என்பதாக அவர்களுக்கு வாக்குப்பண்ணினார் (யோவா 15:26; யோவா. 16:7, 13) அப்போஸ்தலர் 1:8ல் மீண்டும் அவர் அவர்கள் மேல் பரிசுத்த ஆவியை அனுப்புவேன் என்பதாக வாக்குப்பண்ணினார். லூக்.24:49யும் வாசியுங்கள். அப்போஸ்தலர் 2ல் பரிசுத்த ஆவி அப்போஸ்தலர்கள்மேல் ஊற்றப்படுகிறதையும், கிறிஸ்து அவர்களுக்கு போதித்திருந்த சகலத்தையும் நினைப்பூட்டும் படிக்கும் அந்நிய பாஷைகளில் பேசும்படிக்கும் அற்புதங்களை நடப்பிக்கும்படிக்கும் அவர்களுக்கு வல்லமை கொடுக்கப்படுகிறதையும் வாசிக்கிறோம். இவர்கள் மூலம் சகலமும் ஆசீர்வதிக்கப்படும். ஆனால் கிறிஸ்து அக்கினியினாலும் ஞானஸ்நானம் கொடுப்பாரென்றும் யோவான் சொன்னான். இது எதற்கு ஒப்பிடப்படுகிறது? எது இரட்சிக்கப்படும், கோதுமையானது நீதியைக் குறிக்கிறது பின்பு எது சுட்டெரிக்கப்படும், பதர், துன்மார்க்கத்தைக் குறிக்கிறது. கிறிஸ்து அப்போஸ்தலரை பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானப்படுத்துவார், ஆனால் அவர் துன்மார்க்கரையோ அக்கினியினால் ஞானஸ்நானப்படுத்துவார். ஞானஸ்நானமானது தண்ணீரில் மூழ்கடிக்கப்படுதல் என்றும் ஆனபடியினால் அப்போஸ்தலர்கள் பரிசுத்த ஆவியினால் மூழ்கடிக்கப்பட்டார்கள் அல்லது நிரப்பப்பட்டார்கள், கிறிஸ்து அக்கினியினால் ஞானஸ்நானம் கொடுப்பாரென இவ்வார்த்தை சொல்லுகிறபோது துன்மார்க்கர் அக்கினியினால் அமிழ்த்தப்படுவார்களென இது அர்த்தமாகிறதென்பதையும் நாம் புரிந்து கொள்ள வேண்டும். இவ்வாறாக துன்மார்க்கர் தீர்க்கப்படுவார்களென தேவவாக்கியங்களில் நாம் எங்கே வாசிக்கிறோம்? முதல் இடத்தில் ஒருநாள் கிறிஸ்து உலகத்தை நியாயந்தீர்ப்பாரெனவும் துன்மார்க்கர் நரகத்திலே தள்ளப்படுவார்களெனவும் (2பேது 2:9) அல்லது அவர்கள் நித்திய ஆக்கினைஅடையப் போவார்களெனவும் (மத்.25:46) நாம் அறிவிக்கப்படுகிறோம். மீண்டும் நரகம் ஒரு அக்கினிகடல் என விவரிக்கப்பட்டுள்ளது ( 2பேது 3:7, யூதா 7, 21:8) துன்மார்க்கர் தேவனை அறியாதவர்கள் இழந்து போனவர்கள் நித்திய அழிவாகிய அக்கினி கடலில் மூழ்கடிக்கப்படுவார்கள், அல்லது அமிழ்த்தப்படுவார்களென அர்த்தமாகிறது. நிச்சயமாக இருதயத்தில் செம்மையான ஒருவனும் அக்கினியால் ஞானஸ்நானம் பெற விரும்பமாட்டான்.

பவுல் 1 கொரி.10:1-4ல் இவ்வாறு எழுதினான் “ இப்படியிருக்க, சகோதரரே நீங்கள் எவைகளை அறிய வேண்டுமென்றிருக்கிறேனென்றால், நம்முடைய பிதாக்களெல்லாம் மேகத்துக்கு கீழேயிருந்தார்கள் எல்லாரும் சமுத்திரத்தின் வழியாய் நடந்துவந்தார்கள் எல்லோரும் மோசேக்குள்ளாக

மேகத்தினாலும் சமுத்திரத்தினாலும் ஞானஸ்நானம் பண்ணப்பட்டார்கள். எல்லாரும் ஒரே ஞானபோஜனத்தைப் புசித்தார்கள். எல்லாரும் ஒரே ஞானபானத்தைக் குடித்தார்கள். எப்படியெனில் அவர்களோடேகூடச் சென்ற ஞானக்கன்மலையின் தண்ணீரைக் குடித்தார்கள்; அந்த கன்மலை கிறிஸ்துவே" அந்நாட்களில் ஞானஸ்நானம் பெற்றுக்கொள்வது தேவையானதாகக் கருதபடாமலிருந்த போதிலும்கூட சமுத்திரத்தின் வழியே நடந்துவந்த இஸ்ரவேல் ஜனங்களைத் திரும்பிப்பார்த்து. அவர்கள் மேகத்தினாலும் சமுத்திரத்தினாலும் ஞானஸ்நானம் பண்ணப்பட்டார்களென விவரித்தான், வேறுவிதமாக கூறுவோமானால், அவர்கள் மேகத்தினாலும் சமுத்திரத்தினாலும் அடக்கம் பண்ணப்பட்டார்கள் அல்லது மூழ்கடிக்கப்பட்டார்கள்.

செபெதேயுவின் குமாரருடைய தாய் கிறிஸ்துவினுடைய ராஜ்யத்தில் தம்முடைய குமாரராகிய இரண்டு பேரில் ஒருவன் அவருடைய வலது பாரிசத்தில், ஒருவன் இடது பாரிசத்தில் உட்கார கிறிஸ்து அனுமதிக்க வேண்டுமென விண்ணப்பித்த போது, "இயேசு பிரதியுத்தரமாக: நீங்கள் கேட்டுக்கொள்ளுகிறது இன்னது என்று உங்களுக்குத் தெரியவில்லை, நான் குடிக்கும் பாத்திரத்தில் நீங்கள் குடிக்கவும், நான் பெறும் ஸ்நானத்தை நீங்கள் பெறவும் உங்களால் கூடுமா என்றார். அதற்கு அவர்கள் கூடும் என்றார்கள். அவர் அவர்களை நோக்கி: என் பாத்திரத்தில் நீங்கள் குடிப்பீர்கள். நான் பெறும் ஸ்நானத்தையும் நீங்கள் பெறுவீர்கள்; ஆனாலும் என் வலது பாரிசத்திலும் என் இடது பாரிசத்திலும் உட்கார்திருக்கும்படி என் பிதாவினால் எவர்களுக்கு ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிறதோ அவர்களுக்கேயல்லாமல் மற்றொருவருக்கும் அதை அருளுவது என்காரியமல்ல என்றார்" என நாம் வாசிக்கிறோம் (மத். 20:22,23). மீண்டும் கிறிஸ்து ஆகிலும் நான் மூழ்கவேண்டிய ஒரு ஸ்நானமுண்டு.....(லூக் 12:50) என்றார். ஞானஸ்நானமானது பாடுகளினால் நெருக்கப்படுகிறேன் என சிலுவையின் மேல் தம்முடைய பாடுகளைக் குறித்து இங்கே கிறிஸ்து பேசுகிறார். உண்மையாகவே அவர் ஒரே ஒருமுறை இந்தப்பாடுகளின் வழியே சென்றார்.

கடைசியாக, வேதவாக்கியங்கள் விசுவாசிகளின் ஞானஸ்நானத்தைக் குறித்து பேசுகிறது. இந்த ஞானஸ்நானமானது தண்ணீரில் பெறுவதாகும் (அப்.8:26-39) ஒரு அடக்கம் (கொலோ.2:12; ரோமர் 6:3,4), பாவமன்னிப்புக்கென்று பெறுவதாகும் (அப்.22:16), இரட்சிக்கப்படும்படி பெறுவதாகும் (1பேது 3:21), மேலும் ஒருவன் சபைக்குள் சேர்க்கப்பட பெறுவதாகும் (1 கொரி. 12:13). இது கிறிஸ்துவின் நாமத்தில் (அப்.2:38) அதாவது பிதா, குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்தில் (மத்.28:19,20) நடைபெற வேண்டியதாயிருந்தது. கிறிஸ்து நீங்கள் உலகமெங்கும் போய், சர்வசிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள். விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்; விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான்"

(மாற்கு 16:15, 16) என்றார்.

எபேசியர் 4:4-6க்குத் திரும்புகையில் பவுல் ஒரே ஞானஸ்நானம் மட்டுமே உள்ளது என குறிப்பிட்டதை நினைவுகூருங்கள். இந்தக் கூற்றை அவன் கூறின அந்த சமயம் கிட்டத்தட்ட 64 AD யாக இருந்தது. ஆனால் வேதவாக்கியங்களில் நாம் வாசிக்கின்ற எல்லா ஞானஸ்நானத்திலும் எது ஒரே ஞானஸ்நானமாயிருக்கும்? எந்த சமயத்திலும் ஒரு ஞானஸ்நானமானது தண்ணீரில்லாத ஞானஸ்நானம் அல்லது விசுவாசிகளின் ஞானஸ்நானம், இது எப்போதும் குறிப்பிடப்பட்டுள்ளது என உற்று கவனிப்பதற்கு என்று ஒரு சிறந்த விதியாயிருக்கும். வேறு வகையில், வேதவாக்கியங்கள் பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் மற்றும் அக்கினி ஞானஸ்நானம் யோவானுடைய ஞானஸ்நானம், பாடுகளின் ஞானஸ்நானம் மேலும் மேகங்களில் மற்றும் சமுத்திரத்தில் ஞானஸ்நானம் போன்றவற்றைப் பற்றி பேசுகின்றன. ஆனபடியினால் நாம் எபேசி. 4:4-6ல் குறிப்பிடப்பட்டுள்ள ஒரே ஞானஸ்நானத்தைப்பற்றி வாசிக்கையில் நாம் இது விசுவாசிகளின் ஞானஸ்நானத்திற்கு ஒப்பிடப்பட்டுள்ளது என நாம் முடிவுக்குவர வேண்டும்.

நிச்சயமாகவே இன்று பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் நம்முடைய நாட்களிலுள்ள ஜனங்களுக்கென்று கொடுக்கப்பட்டுள்ளதென ஜனங்கள் பேசுகின்றதை நாம் கேள்விப்படுகிறோம். ஆனால் அந்த ஞானஸ்நானமானது கிறிஸ்துவினால் அப்போஸ்தலருக்கென்று வாக்குப்பண்ணப்பட்டிருந்தது, மேலும் அவர் ஒருவரே அதைக் கொடுக்கிறவராயிருந்தார். அந்த ஞானஸ்நானம் ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்காக கொடுக்கப்பட்டபடியினால், இன்று ஒருவரும் அந்த ஞானஸ்நானத்தைப் பெற்றிருக்க முடியாது. தண்ணீர் ஞானஸ்நானத்தைப் பற்றி போதிக்கிற மற்றவர்கள், இரட்சிக்கப்பட்ட விசுவாசி தான் இரட்சிக்கப்பட்டவரா யிருக்கிறாரென காண்பிக்கும்படிக்கு ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளலாம் என உரிமைபாராட்டுகிறவர்கள் உண்டு. அவர்கள் சரியாக இருந்தால் கிறிஸ்துவுக்கு வெளியேயும் அவரது சபைக்கு வெளியேயும் இரட்சிக்கப்பட்டவராயிருக்கிற ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளும் அவருடைய சபைக்குள்ளும் பிரவேசிப்பதற்கு கண்டிப்பாக ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ள வேண்டுமென தேவனுடைய வார்த்தை சொல்லுகிறபடியினால் ஞானஸ்நானம் பெறவேண்டும் என அர்த்தமாகிறது (கலா. 3:26,27; 1கொரி.12:13). இவ்விஷயத்தில் இப்பேர்பட்ட ஜனங்கள் தவறுகின்றனர் என்பதை நாம் அறிவோம். ஒருவன் கர்த்தருக்கு கீழ்ப்படிந்து தண்ணீரில் அடக்கம் என்ற அந்த பகுதியில் இணையாத வரை அவன் இரட்சிக்கப்பட்டவனாயிருக்க முடியாது.

ஞானஸ்நானப்படுத்துவதற்கா‌ தெளித்தல் அல்லது ஊற்றுதல் என்பது தேவனுடைய வார்த்தையின் போதனைக்குத் தூரமானது. ஞானஸ்நானம் பெறும்படிக்கு தலையில் தண்ணீரை தெளிப்பது மற்றும் ஊற்றுதல் பற்றிய எந்த

வழியும் சொல்லப்படவில்லை. ஞானஸ்நானமானது ஒரு அடக்கமாகும், ஒரு முழுகுதல் ஆகும். தெளித்தல் என்பது தெளித்தலே, ஊற்றுதல் என்பது ஊற்றுதலே, ஆனால் ஞானஸ்நானமாகாது. இந்தவிதமான பழக்கங்கள் மனிதனால் உருவாக்கப்பட்டவை.

இப்போது இதுவே கேள்வி: நீங்கள் வேதாகமத்தினுடைய ஒரே ஞானஸ்நானத்தை ஏற்றுக் கொண்டுள்ளீர்களா? அப்படியில்லையென்றால் அதை ஏற்றுக்கொள்ள வேண்டியது அவசியம். நீங்கள் புதிய ஏற்பாட்டில் அப்போஸ்தலர் நடபடிகள் முழுவதும் வாசிப்பீர்களென்றால் கர்த்தருக்குக் கீழ்ப்படிந்த அனைவரும் சுவிசேஷத்தை அல்லது கிறிஸ்துவின் நற்செய்தியைக் கேள்விப்பட்டு தேவனிடத்திலும், கிறிஸ்துவினிடத்திலும் விசுவாசம் கொண்டு தங்களுடைய பாவங்களுக்காக மனந்திரும்பி கிறிஸ்துவே தேவனுடைய குமாரனென்று அறிக்கையிட்டு தங்களுடைய பாவங்கள் மன்னிக்கப்படும் பொருட்டு ஞானஸ்நானம் பெற்றார்கள் அல்லது தண்ணீரில் மூழ்கினார்கள் என நீங்கள் கண்டுகொள்ளலாம். அதன்பின் கர்த்தர் அவர்களை இரட்சித்து தம்முடைய சபையில் அவர்களை சேர்த்துக்கொண்டார் (அப். 2:38, 41, 47). அவர்கள் செய்தபடி நீங்கள் செய்வீர்களென்றால் கர்த்தர் உங்களையும் இரட்சித்து தம்முடைய சபையில் சேர்த்துக்கொள்வார்.

நீங்கள் ஞானஸ்நானம் பெற்றிருப்பீர்களானால் அல்லது நீங்கள் பெற்றிருப்பதாக நினைப்பீர்களானால் அது தெளிப்பாக அல்லது ஊற்றுதலாக அல்லது அது சரியான நோக்கத்திற்காக இல்லாமலிருக்குமானால் நீங்கள் ஆவிக்குரிய பிரகாரமாக ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளவில்லை. நீங்கள் ஏற்கனவே விளக்கமளிக்கப்பட்டுள்ளபடி ஞானஸ்நானம் பெற வேண்டும். இல்லை, ஒரே ஒரு ஞானஸ்நானம் மட்டுமே உள்ளது. மேலும் நீங்கள் கர்த்தருடைய உபதேசத்தின்படி இல்லாவிட்டால் நீங்கள் ஒருபோதும் ஞானஸ்நானம் பெற்றவர்களாயிருக்க மாட்டீர்கள். வேதவாக்கியங்களின்படி நீங்கள் ஞானஸ்நானம் பெறும்போது மட்டுமே நீங்கள் வேதாகமத்தின் ஒரே ஒரு ஞானஸ்நானத்தைப் பெற்றிருக்கிறீர்களென உங்களால் கூறமுடியும்.

## பொது அறிவுச் சோதனை

1. கிரகங்களின் சுற்று விதியை கண்டுபிடித்தவர் யார்?
   அ)ஆரியபட்டா ஆ)கெப்ளர் இ)நியூட்டன்
2. இந்தியாவுடன் முதன்முதலாக தொடர்பு கொண்டவர்கள் யார்?
   அ)டச்சுக்காரர்கள் ஆ)ஆங்கிலேயர்கள் இ)போர்த்துக்கீசியர்கள்
3. அர்ஜுனா விருது எதனுடன் சம்பந்தப்பட்டது?
   அ)விளையாட்டு ஆ)இலக்கியம் இ)திரைப்படம்
4. இந்திய விண்வெளி ஆராய்ச்சிக்கு அடிகோலியவர் யார்?
   அ)ஹோமிபாபா ஆ) சர்.சி.வி.ராமன் இ) விக்ரம் சாராபாய்
5. சங்ககால இலக்கியங்களில் காணப்படும் மொழி எது?
   அ) சமஸ்கிருதம் ஆ) தெலுங்கு இ) தமிழ்

**விடைகள்:**
1. கெப்ளர்
2. போர்த்துக்கீசியர்கள்
3. விளையாட்டு
4. விக்ரம் சாராபாய்
5. தமிழ்

பெண்கள் பகுதி

# எல்லாம் புதிதாயின
## *All things have become new*

*-J. Glory Arjunan*



அன்பு சகோதரியே, எல்லாம் புதிதாயின! இவ்வசனத்தை அடிக்கடி வாசித்திருப்போம். சில வேளைகளில் பிரசங்கத்திலும் கேட்டிருப்போம். நாமும்கூட எல்லாம் புதிதாகவேண்டும், பழைய பாடுகள், பிரச்சனைகள், தோல்விகள், நோய்கள் எல்லாமே நம்மை விட்டு அகல வேண்டுமென விரும்புகிறோம். ஆனால் தேவன் நம்மிடம் எதிர்பார்க்கும் அந்த புதியவைகள் எவைகள் என நாம் அறிந்துகொள்வது இக்கடைசி காலத்திலுள்ள நமக்கு மிகவும் அவசியமென நினைக்கிறேன்.

ஆவியானவர் பவுலின் மூலம், **"..உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள்"** (ரோம.12:2) என திருவுளம்பற்றுகிறார். ஆம், நம் மனம் மறுரூபமாக வேண்டும். மறுரூபம் என்றால் என்ன? ஒரு நிலையிலிருந்து இன்னொரு நிலைக்கு மாற்றமடைவது. அதாவது பழைய நிலையிலிருந்து புதியநிலைக்கு மாற்றமடைவது. அப்படியானால் மனதளவில் நம்முடைய நிலை என்ன என்பதை தேவனுடைய வார்த்தையின் துணை கொண்டு அறிந்துகொள்ள வேண்டும். ஏனென்றால் நம்முடைய உள்ளிந்திரியங்களை தேவன் ஒருவரே அறிவார். நம்முடைய இருதயம் செம்மையாக இருக்கிறதா? அல்லது திருக்குள்ளதாயிருக்கிறதா? என்பதையும் அவர் அறிவார். அவருடைய கண்களுக்குமுன் ஒன்றும் மறைவானதில்லை என வேதம் கூறுகிறது. அன்பு சகோதரியே, இன்றைய நாட்களில் எங்கும் மாய்மாலம் பெருகியுள்ளது. அநேகர் தங்கள் உதடுகளினால் இனிமையாகப் பேசுவர், ஆனால் தங்கள் உள்ளத்திலோ வஞ்சகம் அல்லது கபடு நிறைந்து காணப்படும். ஆகையால் நாமோ மிகவும் ஞானமுள்ளவர்களாய் நடந்துகொள்ள வேண்டியது மிக அவசியமாயிருக்கிறது. கிறிஸ்துவுக்கு வெளியே அல்லது புறம்பே இருக்கிறவர்களுக்கு முன்பாக மிக ஞானமுள்ளவர்களாக நடக்கவேண்டும். வேதமும் அவ்வாறே கூறுகிறது "புறம்பேயிருக்கிறவர்களுக்கு முன்பாக ஞானமாய் நடந்து காலத்தைப் பிரயோஜனப்படுத்திக் கொள்ளுங்கள்" என (கொலோ. 4:5) போதிக்கிறது. ஒருவேளை நாமே, கிறிஸ்துவுக்கு வெளியே அல்லது புறம்பேயிருக்கிறவர்களைப் போல் மாய்மாலம் பண்ணிக்கொண்டு வாழ்வோமென்றால் முதலாவது நாம் நம்மை சரிசெய்து கொள்ள வேண்டும். நம்முடைய மனம் பலவிதமான பாவங்கள் நிறைந்து பழைய ஆதாமின் நிலையிலிருக்குமானால் நம் மனம் புதிதாக வேண்டியது அவசியம் "உங்கள் உள்ளத்திலே புதிதான ஆவியுள்ளவர்களாகி." (எபேசி.4:23) என வேதம் கூறுகிறது. பழைய ஜென்ம சுபாவங்களாகிய கோபம்,

மேட்டிமை, பொய், அசுத்தம், புறங்கூறுதல், கோள்ச்சொல்லுதல், சுயநலம், இன்னும் இது போன்ற அநேக காரியங்களை நம்மிலிருந்து அப்புறப்படுத்த கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை நம் உள்ளத்தில் ஏற்றுக்கொள்ள வேண்டும். அதுமாத்திரமல்ல, நம்முடைய இப்பேர்பட்ட பாவங்கள் மன்னிக்கப்பட்டு உள்ளத்தில் புதிதான ஆவியினை பெற ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளவேண்டும். அப் 2:38 "நீங்கள் மனந்திரும்பி ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள்; அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள்" என்கிறது. அப்படியானால் ஞானஸ்நானத்தின் மூலம் நாம் உள்ளத்திலே பரிசுத்த ஆவியாகிய அந்த புதிதான ஆவியுள்ளவர்களாக மாறுவோம். அப்போது பழையவைகள் ஒழிந்துபோகும். இவ்வாறாக நம்முடைய மனம் புதிதாகி நாம் நம்முடைய பழைய பாவநிலையிலிருந்து மாறி மறுரூபமடைவோம்.

இதையே கொலோசெயர் 3:8-9ம் கூட "இப்பொழுதோ கோபமும் மூர்க்கமும் பொறாமையும் உங்கள் வாயில் பிறக்கலாகாத தூஷணமும் வம்பு வார்த்தைகளுமாகிய இவைகளையெல்லாம் விட்டுவிடுங்கள். ஒருவருக்கொருவர் பொய் சொல்லாதிருங்கள்; **பழைய மனுஷனையும் அவன் செய்கைகளையும் களைந்துபோட்டு.**" என வலியுறுத்துகிறது. மேற்கூறப்பட்டுள்ள இத்தகைய செய்கைகள் நம்மிடம் இருக்கின்றனவா? அப்படியிருக்குமானால் அவைகளை களைந்து போட இப்போதே முயற்சிப்போம். கிறிஸ்து தேவனுடைய வலது பாரிசத்தில் வீற்றிருக்கும் இடத்திலுள்ள மேலானவைகளை சுதந்தரித்துக்கொள்ள நாம் அழைக்கப்பட்டுள்ளோம். பூமிக்குரிய ஆசீர்வாதங்களைப் பெற அநேகர் அடித்துக்கொள்ளுகின்றனர். ஓயாது தங்களுடைய மேன்மையையே நாடி மற்றவர்களையும் காயப்படுத்தவோ அல்லது பிறருக்குத் தீமைசெய்யவோ துணிகின்றனர். அன்பு சகோதரியே, இழிவான ஆதாயத்தை நாடிப் போவாயானால், தேவனுடைய வலது பாரிசத்திலுள்ள மேலானவைகளை எப்படி பெற்றுக்கொள்ளுவாய்? கிறிஸ்துவுக்குப் பிரியமில்லாத உங்களுடைய செய்கைகளினால் மேலான ஆசீர்வாதத்தை இழந்துவிடாதீர். லோத்தின் மனைவி அன்று பூமிக்குரியவைகளைத் திரும்பிப்பார்த்து உப்புத்தூணாகி மேலான காரியத்தை இழந்தாள். ஒருவேளை வரக்கூடிய பிரச்சனைகளின் அழுத்தத்தினாலும், பாரத்தினாலும் கிறிஸ்துவுக்குப் பிரியமான செய்கைகளை என்னால் செய்யமுடிகிறதில்லை. கர்த்தரை நம்பி இத்தனை நாட்களாக என் துன்பமும் துயரமும் எங்கே ஒழிந்தன, விரும்பாத காரியங்களே என் வாழ்வில் நடக்கிறது. அநேக இழப்புகளையும், வியாதிகளையுமே அனுபவிக்கிறேன் என்று அங்கலாய்த்துக்கொண்டிருக்கிறீர்களா? அன்று நகோமி தன்னுடைய புருஷனையும், தன்னுடைய குமாரர்களையும் இழந்தாள். நான் நிறைவுள்ளவளாய்ப் போனேன்; கர்த்தர் என்னை சிறுமைப்படுத்தி, சர்வவல்லவர்

என்னை கிலேசப்படுத்தியிருக்கையில்." (ரூத்.1:21) என்று அங்கலாய்த்துக் கொண்டாள். அன்புசகோதரியே, நாம் கர்த்ரை ஏற்றுக்கொண்டவுடனே, கர்த்தர் எல்லாவித உலக ஆசீர்வாதங்களையும் குறைவில்லாமல் தருவேன் என நமக்கு வாக்குப்பண்ணவில்லை. ஆனால் 'தேவன் நம்மோடிருப்பதாக' (மத். 1:23) வாக்குப்பண்ணியுள்ளார். இந்த ஆசீர்வாதம் பெரிதல்லவா? அவர் இந்த பூமியிலே நம்மோடிருப்பாரானால், மறுமையில் மேலான இடத்தில் அவரோடுகூட நாம் இருக்கப்போவது அதிக நிச்சயமல்லவா? அன்பு சகோதரியே வரப்போகிற மேலான ஆசீர்வாதத்தை நினைத்து நம்முடைய பழைய செய்கைகளைக் களைந்து போடுவோமாக!

மேலும் மெய்யான நீதியிலும் பரிசுத்தத்திலும் தேவனுடைய சாயலாகச் சிருஷ்டிக்கப்பட்ட **புதிய மனுஷனைத் தரித்துக்கொள்ளுங்கள்**" (எபே.4:24) ஆம். எவ்வாறு புதிய மனுஷனைத் தரித்துக்கொள்ளுவது? மெய்யான அதாவது உண்மையான நீதியிலும், பரிசுத்தத்திலும் நம்மை சிருஷ்டித்தவருடைய சாயலுக்கொப்பாய் மாறும்போது புதிய மனுஷனைத் தரித்துகொள்கிறோம். அதாவது ஆதாமின் கீழ் பாவத்திற்குட்பட்ட நம்முடைய பழைய மனுஷன் அவரோடகூடச் (இயேசுவோடுகூட) சிலுவையில் அறையப்படும் போது புதிய மனுஷனைத் தரித்துக்கொள்வோம். பவுல் இதனையே "கிறிஸ்துவுடனேகூடச் சிலுவையிலறையப்பட்டேன்; ஆயினும் பிழைத்திருக்கிறேன்; இனிநான் அல்ல, கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார்..." (கலா. 2:20) என்கிறார். ஏனெனில் "அவரே (இயேசுவே) தேவனால் நமக்கு ஞானமும் நீதியும் பரிசுத்தமும் மீட்புமானார்." (1 கொரி 1:31) இப்படியாக நீதியும் பரிசுத்தமுமாயிருக்கிற இயேசுவைத் தரித்துக்கொள்ளும்போது கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே நமக்குள்ளும் குடிகொள்ள ஆரம்பிக்கிறது. இப்படியாக நாம் புதிய மனஷனைத் தரித்துக்கொள்கிறோம்.

அன்பான சகோதரியே, இதுவே தேவன் நம்மிடத்தில் எதிர்பார்க்கிற ஒன்றாகும். வீழ்ந்துபோன ஆதாமின் பாவசுவாபத்திலிருந்து நம்முடைய மனதையும், நம்முடைய செய்கைகளையும்களைந்து போட்டு புதிய மனுஷனைத் தரித்துக்கொள்வோம். மீண்டும் ஏதேனின் (The Happy Place) வாழ்விற்கு திரும்ப, கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் இரத்தமே பரிகாரமாயிருப்பதினால் அவரை விசுவாசித்து, அவரே ஜீவனுள்ள தேவனுடைய குமாரனென்று அறிக்கையிட்டு, ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள். அப்போது பரிசுத்தஆவியின் வரத்தைப்பெற்று புதிய மனுஷியாக மாறுவீர்கள். பழையவைகள் எல்லாம் ஒழிந்துபோம். எல்லாம் புதிதாகும். அப்போது கர்த்தர் தம்முடைய சபையிலே உங்களை சேர்த்து, போஷித்துக் காப்பாற்றுவார். இந்த புத்தாண்டிலே அவருடைய மந்தையில் சேர்ந்து உள்ளும் புறம்பும் மேய்ச்சலைக் கண்டு நித்திய ஆசீர்வாதம் பெற கர்த்தர் தாமே உதவிசெய்வாராக!

## வேதஅறிவுப்போட்டி எண் 114-ன் விடைகள்

1. வைக்கோல் துரும்பாயிருப்பார்கள் -ஒப.18
2. என் சிநேகிதராயிருப்பீர்கள் - யோவா.15:14
3. புரண்டுவரக்கடவது -ஆமோ.5:24
4. பர்னபாவை, பவுலை -அப்.14:12
5. யாக்கோபு -ஓசி.12:4
6. பாவமே -ரோ.7:20
7. தானியேல் -தானி.9:3
8. நமக்குண்டு -1கொரி.8:6
9. மந்தையையோ -எசே.34:3
10. கொரிந்து -2கொரி.7:6

## வேதஅறிவுப்போட்டி எண் 114-ல் வெற்றி பெற்றவர்கள்

G.பூங்கோதை -வெ.பாளையம்
J.ரூத் -சிறுவத்தூர்
P.கிறிஸ்டோபர் -மறவங்குளம்
M.சாலொமோன் -கொடைக்கானல்
A.ஆனந்த் -நாகமலைபுதுக்கோட்டை
Mrs.மெர்சிடா -திண்டுக்கல்
S.பாக்கியராஜ் -திண்டுக்கல்
G.P.ஏசையன்ராஜ் -கோபி
N.ஜான்செல்லையா -மதுரை
Tmt.மரகதம் திரவியம் -கோம்பை
N.கமலவேணி -சென்னை
J.நிர்மலாஜான் -மதுரை
M.சுதாகர் -கொடுமுடி
R.நேசகுமாரி -திருச்சி
V.F.ஷர்லோ -பாண்டிச்சேரி
Mrs.ஜோதி கலை -கோவை
P.செல்விரேணுகா -தென்காசி
S.R.பெரியசாமி -சேலம்
J.பேஷில் தேவசகாயம் -மதுரை
R.அருண்குமார் -பீடரியூர்
Sis.ஜாய் வாசுகி -கோவை




## மணமகன் தேவை

1. 22வயது+2படித்து செவிலியர் 1வருடம் படித்த மணமகள் தொடர்பு: சகோ.சாமுயல்ராஜ் -ஊழியர் சத்தியமங்கலம் 98651 61589
2. 24 வயது M.Sc., தனியாரில் பணிபுரியும் மணமகள் தொடர்பு சகோ.செங்கோல்ராயன் -ஊழியர் பாண்டிச்சேரி 92457 15947
3. 23 வயது M.Sc., நர்சிங் படித்த மணமகள் தொடர்பு சகோ.செங்கோல்ராயன் - ஊழியர் பாண்டிச்சேரி 92457 15947
4. 24 வயது B.Sc., நர்சிங் படித்து சென்னையில் பணிபுரியும் மணமகள் தொர்பு சகோ.நத்தானியேல் - ஊழியர் சென்னை 97911 51587
5. 21 வயது+2 படித்த மணமகள் தொடர்பு சகோ.நத்தானியேல் - ஊழியர் சென்னை 97911 51587

"இந்தக்காரியம் கர்த்தரால் வந்தது" ஆதி.24:50

## மணமகள் தேவை


1. 27 வயது BE., படித்த வியாபாரம் செய்யும் மணமகன் தொடர்பு சகோ.ஆல்பர்ட்சங்கர் சென்னை 99625 93031
2. 24 வயது B.Sc., ஹோட்டல் மானேஜ்மென்ட் சூப்பர்வைசர் மணமகன் தொடர்பு சகோ.ஜெபக்குமார் - ஊழியர் சென்னை 93855 00883
3. 28 வயது MSW/MBA., கணிணி துறையில் பணிபுரியும் மணமகன் தொடர்பு சகோ. ஜெபக்குமார் சென்னை 93855 00883
4. 27 வயது டிப்ளமா E&E உதயா டிவி தொடர்பு சகோ.சார்லஸ் பெங்களூரு 99002 29066
5. 29 வயது M.S.,M.Phil., முடித்த மணமகன் தொடர்பு சகோ.சாமுயல்ராஜ் ஊழியர் சத்தியமங்களம் 98651 61589

மேலும் தொர்புக்கு:
S.David Martin - 98404 25080

# இளம் யானைகள்

## Adolesent Elephants

*-John Gipson*



சமீபத்தில் தொலைக் காட்சியில் நான் கண்ட இளம் யானைகளின் செயல்பாடுகளால் நான் (வசீகரிக்கப்பட்டேன்) கவரப்பட்டேன். அதிக நெருக்கடியின் காரணமாக. இந்த இளம் யானைகளில் அதிகமானவை வேறொரு இடத்திற்கு இடம் பெயர்ந்தன. குட்டியானைகளும் இடம்மாற்ற நிகழ்வினைப் புரிந்துகொண்டு அதன்படியே செய்தன.

கொஞ்சம் கொஞ்சமாக, இந்த இளம்யானைகள் கட்டுக்கடங்காதவைளாக மாறின. அவைகள் டீனேஜ் குருப்பாக சேர்ந்துகொண்டு, மரக்கிளைகளை விட்டெறிவது, காண்டாமிருகங்களை கொல்வது போன்ற செயல்களைச் செய்தன. இந்த விதமாக எதிர்பாராத சம்பவங்களை சமாளிக்க ஏற்படுத்தப்பட்ட படை இதை புகைபடம் பிடிக்க ஆரம்பித்தனர். அத்தோடு ஒவ்வொரு குற்றவாளியின் கடுமையான செயல்களை படமெடுத்தனர். ஏனென்றால் இந்த இளங்குற்றவாளிகளுக்கு சரிசெய்யும் வசதிவாய்ப்புகளை அவைகள் பெற்றிருக்கவில்லை. அவைகளில் அதிகமானவை அடித்து மிதிக்கப்பட்டவை களாகயிருந்தன. இதுமாதிரியான பிரச்சனை இதற்குமுன் ஒருபோதும் ஏற்படவில்லை.

கடைசியாக, கண்காணிப்புப்படையினர் இந்த இளங்காளை யானைகள் எப்படி யானைகளாக நடந்துகொள்ள வேண்டுமென்பதை அறிந்து கொள்ளவில்லை என தீர்மாணித்தனர். அவைகளுக்கு நடந்து கொள்ளுவதற்கான மாதிரிகள் மற்றும் தகப்பனுடைய போதனைகள் தேவைப்படுகிறது. யாரோஒருவர் இவர்களுடைய கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரவேண்டும். சில பெரிய ஆண் யானைகள் கப்பலில் ஏற்றப்பட்டன. உடனே கட்டுப்பாட்டிற்குள்ளிருந்த இளம் யானைகள் கற்றுக்கொண்டன. அவைகள் அவசர அவரமாக சவுக்கடி பெற்று ஒழுங்குக்கு வந்து பின்பு காண்டாமிருகங்கள் கொல்லப்படுவது நிறுத்தப்பட்டது.

இது சிறிய வயது வந்த மேற்பார்வையினால் செய்ய முடியும் என்பது என்ன ஒரு வேடிக்கை நான் சாலமோனைப் போல் விலங்குகளின் ராஜ்யத்தை ஆராய்வதில் ஞானமுள்ளவனாய் இருந்திருப்பேனானால். இது வாலிபரோடு ஒப்பிடப்படுகையில் ஆண் யானைகளை மேற்பார்வையிடுவதின் முக்கியத்துவத்தைப் பற்றிய சில முடிவிற்கு நான் வந்திருப்பேன். மேலும் நான் இதைச் சொல்லத் தூண்டப்படுவேன்.

**"பிரம்பும் கடிந்துகொள்ளுதலும், ஞானத்தைக் கொடுக்கும்;**
**தன் இஷ்டத்திற்கு விடப்பட்ட பிள்ளையோ தன் தாய்க்கு வெட்கத்தை**
**உண்டுபண்ணுகிறான்" - நீதி.29:15**

# தேவ சித்தம்

## God's Will

தேவ சித்தம் என்பது அவருடைய விருப்பத்திற்கு நம்மை அற்பணிப்பது. முதலாவது இதை நன்கு அறிந்தவர் ஆண்டவர் இயேசுகிறிஸ்து. அவர் ஜெபிக்கும்போது தம்மை முழுவதுமாக அவருடைய சித்தத்திற்கு ஒப்புக்கொடுத்தார். "பிதாவே, உமக்குச் சித்தமானால் இந்த பாத்திரம் என்னைவிட்டு நீங்கும்படி செய்யும்; ஆயினும் என்னுடைய சித்தத்தின்படியல்ல, உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது என்று ஜெபம்பண்ணினார்" (லூக்.22:42). நான் என்னை தேவனுடைய சித்தத்திற்கு முழுவதுமாக ஒப்புக்கொடுத்துவிட்டேன் என்று ஒருவர் சொல்லி தன்னுடைய விருப்பத்தின்படியே நடப்பாரேயானால் அவர் தேவ சித்தம் செய்கிறவரா? இல்லையே. பொதுவாக அநேகர் தேவ சித்தம் செய்வதாக சொல்லுவார்கள் ஆனால் அதிகமான நேரங்களில் தங்களுடைய விருப்பம் நிறைவேறவே பிரயாசப்படுவார்கள்.


எடுத்துக்காட்டாக பாருங்கள். ஒருவர் ஒரு பொருளுக்காக தேவனை நோக்கி ஜெபித்துவிட்டு, அந்த பொருள் கிடைக்காத வேளையில் அநேகர் அவரைப்பார்த்து கேட்கும்போது அவருக்குச் சித்தமானால் கொடுப்பார் என நல்ல அறிக்கை செய்துவிட்டு, தேவன் நம்மை மற்றவர்கள் மத்தியில் வெட்கப்படும்படி செய்துவிட்டாரே என்று தன்னுடைய இருதயத்தில் அவர் சொல்லுவாரேயானால் அவருடைய நம்பிக்கை எப்படிப்பட்டதாக இருக்கும்? அவர் தேவனுடைய சித்தத்திற்கு தம்மை அர்ப்பணித்தவரா? என்று தியானிப்போமானால் அவர் உதட்டளவில் அறிக்கை செய்திருக்கிறார். ஆனால் உள்ளான மனதில் தன்னுடைய விருப்பம் நிறைவேறவே விரும்பியிருக்கிறார் என அறிகிறோம்.

அன்பானவர்களே, உலகத்தில் உண்டாக்கப்பட்ட ஒவ்வொன்றையும் ஒவ்வொரு நோக்கத்தோடு தேவன் தம்முடைய சித்தத்தின்படியே உண்டாக்கியிருக்கிறார். எடுத்துக்காட்டாக பாருங்கள்: "தேவன் தமது சித்தத்தின்படி, அவயவங்கள் ஒவ்வொன்றையும் சரீரத்திலே வைத்தார். ...கண்ணானது கையைப்பார்த்து, நீ எனக்கு வேண்டுவதில்லையென்றும்; தலையானது கால்களை நோக்கி: நீங்கள் எனக்கு வேண்டுவதில்லையென்றும் சொல்லக்கூடாது. சரீரஅவயவங்களில் பலவீனமுள்ளவைகளாய்க் காணப்படுகிறவைகளே மிகவும் வேண்டியவைகளாயிருக்கிறது" என்கிறார் (1கொரி.12:18-22). தேவன் சரீரத்தில் வைத்திருக்கிற அவயவங்களில் ஒன்றும் தள்ளப்படத்தக்கதல்ல வேண்டாதவைகளும் அல்ல. அவர் தமது சித்தத்தின்படியே அவைகளை அமைத்திருக்கிறார். உங்களையும் தேவன் அந்தவிதமாகவே கர்த்தருடைய சரீரமான சபையில் வைத்திருப்பார் என்று கர்த்தருக்குள் நம்புகிறோம். தேவ சித்தம் செய்ய அவருக்கு உங்களை முழுமையுமாக ஒப்புக்கொடுங்கள்.

ஒரே வழி

‘ஒரே வழி’ வேதபாடம்

The Master Course



படிக்க விரும்புகிறவர்கள் இன்றே தபால் செலவுக்காக ரூபாய்15-ஐ அனுப்பி, ஒரு வருடத்தில் பயின்று **Certificate** பெற்றுக்கொள்ளுங்கள் வயது: 20 க்கு மேல்.

**Batlagundu Bible College**
**Post Box 5,**
**Batlagundu-624 202**
**S.INDIA**

## ஜெபியுங்கள்



- ★ கடந்த மாதம் சேலம் மாவட்டங்களில் நடைபெற்ற ஊழியங்களுக்காக...
- ★ கர்த்தருக்குள் மரித்த சகோ.எழில் அவர்களுடைய குடும்பத்திற்காக...
- ★ சகோ.பிரபாகரனுடைய ஊழியம் ஆசீர்வதிக்கப்பட....
- ★ சுவிசேஷத்திற்கு கீழ்ப்படிந்து பாவமன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெற்றுக்கொண்ட N. ராஜலெட்சுமி மற்றும் N. எஸ்தருக்காக...

## நடப்புச் செய்திகள்

1. நாடு முழுவதும் உள்ள தேசிய நெடுஞ்சாலைகளின் எண்களை விஞ்ஞான பூர்வமாக மாற்ற மத்திய அரசு முடிவுசெய்துள்ளது.
2. கல்வி, மருத்துவம், தகவல் தொடர்புக்கு 2 புதிய செயற்கை கோள்கள் ஏப்ரலில் விண்ணில் ஏவப்படும் என இஸ்ரோ தலைவர் ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.
3. மாசற்ற, தூய்மையான உடனடி மின்சாரத்தை தரக்கூடிய ‘ப்ளூம் பாக்ஸ்’ மின்சார பெட்டியை அமெரிக்க வாழ் இந்தியர் கண்டுபிடித்துள்ளார்.
4. வரதட்சணைக் கொடுமை, வேலையின்மை, வறுமையைவிட காதல் தோல்வியால் தற்கொலை செய்துகொள்வோர் அதிகம் எனபுள்ளி விபரம் தெரிவிக்கிறது.
5. ஹைதிநாட்டில் கடந்த மாதம் ஏற்பட்ட பயங்கர பூகம்பத்துக்கு பலியானவர்கள் எண்ணிக்கை 3லட்சத்தை தாண்டுகிறது.

The World Evangelism கொடைக்கானலில் நடத்தும் Retreat -ல் கலந்து கொள்ள விருப்பமானால் இன்றே உங்களுடைய பெயரை கீழ்க்காணும் முகவரியில் ரூ.100/- அனுப்பி பதிவு செய்து கொள்ளுங்கள். தேதி பின்பு அறிவிக்கப்படும்.

**THE WORD OF CHRIST**
**P.O.BOX 5,**
**Batlagundu 624 204,**
**S.INDIA**

பகுதி-3 UNIT

# சிறுவர்களுக்காக...

## Especially For Kids



★ கண்ணீரோடே விதைக்கிறவர்கள் கெம்பீரத்தோடே அறுப்பார்கள் - சங்கீதம் 126:5

Those who sow in tears shall reap in joy - Psalm 126:5

★ பகை விரோதங்களை எழுப்பும்: அன்போ சகல பாவங்களையும் மூடும் - நீதிமொழிகள் 10:12

Hatred stirs up strife. But love covers all sins - Proverbs 10:12

★ ஜீவ அப்பம் நானே - யோவான் 6:48

I am the bread of life - John 6:48

★ மாம்சத்துக்குட்பட்டவர்கள் தேவனுக்குப் பிரியமாயிருக்கமாட்டார்கள் - ரோமர் 8:8

Those who are in the flesh cannot please God - Romans 8:8

★ பூமியும் அதின் நிறைவும் கர்த்தருடையது - 1கொரிந்தியர் 10:26

For 'The earth is the LORD'S, and all its fullness' 1Corinthians 10:26

## கேள்வி - Question

1. இயேசுவுக்கு தன் சொந்த கல்லறையை கொடுத்த சீஷன் யார்?
அ)பேதுரு ஆ)யாக்கோபு இ)யோசேப்பு
Who gave his own tomb to Jesus? A)Peter B)Jams C)Joseph

2. பத்மு தீவுக்கு நாடு கடத்தப்பட்ட சீஷன் யார்? அ)லூக்கா ஆ)யோவான் இ)மத்தேயு
Who was exiled to the island of Patmos? A)Luke B)John C)Mattew

3. சிங்கங்களின் கெபியிலே போடப்பட்ட தீர்க்கன் யார்? அ)தானியேல் ஆ)ஏசாயா இ)எலியா
Which prophet was cast into the den of lions?A)Daniel B)Isaiah C)Elijah

4. யாருடைய நாட்களில் தேவன் உலகத்தை ஜலத்தினால் அழித்தார்?
அ)மோசே ஆ)சாமுவேல் இ)நோவா
In whose days God destroyed the world in Floods?
A)Moses B)Samuel C)Noah

5. நான்கு நாட்களுக்கு பின்பு இயேசுவினால் உயிரோடு எழுப்பப்பட்டவன் யார்?
அ)விதவையின் மகன் ஆ)லாசரு ஈ)சிலுவையில் தொங்கிய கள்ளன்
Who was risen from death after four days by Jesus? A)a widow's son
B)Lazarus C)Criminal hanged on the cross

## CHORUSES

ஓ. தேவனுக்கு மகிமை தூக்கியெடுத்தார்
என்னைத் தூக்கி எடுத்தார் இயேசு
தம் கரத்தை நீட்டி இரட்சித்தாரே
என் தேவனுக்கு மகிமை!
இயேசுவை நேசிக்கிறேன்
மென்மேலும் நேசிக்கிறேன்
அக்கரையில் நான் நின்று அவரை
என்றென்றும் வாழ்த்திடுவேன்

O. glory to God He has lifted me up
He has lifted me up I know
He reached out His hand and He lifted me up
And that's why I love Him so:
I love him more and more:
I love him more and more:
And when I stand upon the other shore
I'll praise Him more and more

கடந்த மாதம் கலந்து கொண்டவர்கள்
1. இளமதி
2.விஜயா



சிறுவர் பகுதி

# பவுலின் மனமாற்றம்

*வேதவாசிப்பு: அப்.22:3-21*



அன்பான தம்பி தங்கைகளா, நீங்கள் பவுலைக்குறித்து அதிகமாக தெரிந்திருப்பீர்கள். அவர் புதிய ஏற்பாட்டிலே பதினான்கு நிருபங்களை எழுதியுள்ளார். அவர் ஒருகாலத்தில் கிறிஸ்தவத்திற்கு விரோதமாக செயல்பட்டுவந்தார். அவரை ஆண்டவர் சந்தித்து ஊழியத்தில் பயன்படுத்தி வந்தார். அவர் எப்படி மனந்திரும்பினார் என்று தெரியுமா? அவரே சொல்வதைக் கவனிப்போம்.

நான் யூதன், சிலிசியா நாட்டிலுள்ள தர்சுபட்டணத்திலே பிறந்து, இந்த நகரத்திலே கமாலியேலின் பாதத்தருகே வளர்ந்து முன்னோர்களுடைய வேதப்பிரமாணத்தின்படியே திட்டமாய்ப் போதிக்கப்பட்டு, இன்றையதினம் நீங்களெல்லாரும் தேவனைக்குறித்து வைராக்கிய முள்ளவர்களாயிருக்கிறதுபோல நானும் வைராக்கியமுள்ளவனாயிருந்தேன். நான் இந்த மார்க்கத்தாராகிய புருஷரையும் ஸ்திரீகளையும் கட்டி, சிறைச்சாலைகளில் ஒப்புவித்து, மரணபரியந்தம் துன்பப்படுத்தினேன்; ஒரு முறை நான் தமஸ்குவுக்குச் சமீபமானபோது, மத்தியானவேளையிலே, சடிதியாய் வானத்திலிருந்து பேரொளி உண்டாகி, என்னைச் சுற்றிப் பிரகாசித்தது நான் தரையிலே விழுந்தேன் அப்பொழுது: சவுலே, சவுலே, நீ என்னை ஏன் துன்பப்படுத்துகிறாய் என்ற என்னுடனே சொல்லுகிற ஒரு சத்தத்தைக் கேட்டேன். அதற்கு ஆண்டவரே நீர் யார் என்றேன். நீ துன்பப்படுத்துகிற நசரேயனாகிய இயேசு நானே என்றார்.

அந்த ஒளியின் மகிமையினாலே நான் பார்வையற்றுப்போனபடியினால் என்னோடிருந்தவர்களால் கைலாகு கொடுத்து வழி நடத்தப்பட்டுத் தமஸ்குவுக்கு வந்தேன். அங்கு அனனியாவை சந்தித்து ஞானஸ்நானம் பெற்று அன்று முதல் சுவிசேஷத்தை பிரசங்கித்து வருகிறேன். நான் உன்னைத் தூரமாய் புறஜாதிகளிடத்திலே அனுப்புவேன் என்று சொன்ன கர்த்தருடைய வார்த்தைப்படியே இந்த பவுல் எருசலேம் துவக்கி இல்லிரிக்கம்வரையும் சுவிசேஷத்தை பூரணமாய் பிரசங்கித்திருக்கிறார்.

இந்த புவுலைப்போல நீங்களும் வளர்ந்து வாலிபராகும்போது வல்லமையுள்ள ஊழியக்காரர்களாக மாற வேண்டும். உலகமுழுவதற்கும் சென்று சுவிசேஷம் அறிவிக்கவேண்டும். செய்வீர்களா! செய்வீர்கள் என்று நம்புகிறோம். உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

**மனப்பாடவசனம்**


"கிறிஸ்துவின் சுவிசேஷத்தைக் குறித்து நான் வெட்கப்படேன்; முன்பு யூதரிலும் பின்பு கிரேக்கரிலும் விசுவாசிக்கிறவனெவனோ அவனுக்கு இரட்சிப்பு உண்டாவதற்கு அது தேவபெலனாயிருக்கிறது" (ரோம.1:16).

# வேத அறிவுப் போட்டி எண்.115

போட்டியாளர்கள் கவனத்திற்கு,

கீழ்க்கண்ட பத்து கேள்விகளுக்கும் வசன ஆதாரத்துடன் 50 பைசா தபால் கார்டில் இம்மாதம் 25ம்தேதிக்குள் எமக்கு வந்து சேரும்படி எழுதி அனுப்பிவையுங்கள். இருபது வயதுக்கு மேற்பட்டவர்கள் இப்போட்டியில் கலந்துகொள்ளலாம். பதிவு எண்ணுடன் உங்கள் முழு முகவரியை தெளிவாக எழுதவும்.

1. பூர்வகாலத்திலிருந்ததுபோல எங்கள் நாட்களைப் புதியவைகளாக்கும் என்று எந்த புஸ்தகத்தில் வாசிக்கிறோம் ?
2. தேவன் மனுஷரிடத்தில் பட்சபாதமுள்ளவரா ?
3. தங்கள் புருஷரின் அநுமதியில்லாமல் எவளுக்குப் பணியாரங்களைச் சுட்டு, பானபலிகளை வார்த்து, அவளை நமஸ்கரித்தார்கள் ?
4. மனுஷருக்கென்று ஊழியஞ்செய்யாமல், கர்த்தருக்கென்றே நல்மனதோடே ஊழியஞ்செய்யுங்கள் என்று எந்த அப்போஸ்தலன் எழுதுகிறார் ?
5. மண்ணோடுகளுக்குக்கொத்த ஓடாயிருந்தும், தன்னை உருவாக்கினவரோடே வழக்காடுகிறவனுக்கு என்ன ?
6. பவுல் தெசலோனிக்கேயிலிருந்தபோது குறைச்சலை நீக்கும்படி இரண்டொருதரம் அனுப்பிய சபையார் யார் ?
7. நேசவைராக்கியம் எதைப்போல் கொடிதாயிருக்கிறது ?
8. நீங்கள் மரித்தீர்கள், உங்கள் ஜீவன் எவருடனே தேவனுக்குள் மறைந்திருக்கிறது ?
9. இணங்குதல் எப்படிப்பட்ட குற்றங்களையும் அமர்த்திப்போடும் ?
10. மக்கெதோனியாவிலும் அகாயாவிலுமுள்ள விசுவாசிகள் யாவருக்கும் மாதிரிகளானவர்கள் யார் ?



**Bro.A. PRABHAKARAN**, Evangelist,
Church of Christ, 1.106, Pillaikalathur,
Villipalayam-637 206,Paramathi(T.K.)
**NAMAKKAL DISTRICT, S.INDIA.**
Phone: 04268 251009.
Sunday Worship : 10.00 a.m.



**Website: www.thewordofchristindia.com**

Owned and published by B. Arjunan from 17.2.102 D/5, Rajan nagar, Batlagundu - 624 202 and printed by R. Sathiyamoorthy at Bharathi Press, 14/13/24 Melamanthai Street, Batlagundu - 624 202.
Editor : B. Arjunan.

R.N.I.No.TNTAM/2000/3629 Postal Registration No.DDL/19/2009-2011
Posted at Batlagundu Post Office on 10th Mar. 2010



METTUPALAYAM PREACHERS' MEETING

**உங்கள் வானொலியில்**

இலங்கை ஆசிய சேவை
SW 25 மற்றும் 41 மீட்டரில்
ஒவ்வொரு சனிக்கிழமை மாலை
5.30 முதல் 5.45 மணி வரை
கேட்டு பயன் பெறுங்கள்

**உங்கள் தொலைக்காட்சியில்**

**TAMILAN TV**
EVERY Monday 6.00 - 6.15 a.m
**IMAYAM TV**
EVERY Wednesday 6.30 - 6.45 a.m

**BATLAGUNDU CHURCH OF CHRIST**
*MEETS HERE*
17-2-102 D/5, RAJAN NAGAR, BATLAGUNDU-624 202,
DINDIGUL DISTRICT, S.INDIA.
Phone : 04543 263278, Mobile: 94435 58041
e-mail: thewordofchrist@sancharnet.in
Website: www.thewordofchristindia.com

*Postal Address:*
**THE WORD OF CHRIST**
**POST BOX No. 5**
**BATLAGUNDU - 624202**
**S.INDIA**